# ஒரு கல்லில் இரு காய் அடிக்கும் தந்திரம்!

Phone No. 4502 விலை அணா ஒன்று] Regd.No.M. 5458 [இலங்கை 10 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1] சென்னை (10—1—50) வெளியூர் (11—1—50) [ இதழ் 139

## காமன்வெல்த் மாநாடு பிரிட்டனின் ராஜதந்திர சிருஷ்டி!

—(o)—

### விடுதலை இயக்கங்களை வீழ்த்தத் திட்டம்!

—(o)—

### அமெரிக்காவையும் மடக்க முயற்சி!

"கொழும்புவில் கூடியிருக்கும் காமன்வெல்த் மாநாடு பற்றி சோவியத் இதழ் 'பிராவ்தா' நுணுக்கமான கருத்தைத் தெரிவித்துள்ளது. யக்கோவ் விட்டாவ் அவ்விதழில் விஞ்ஞான ரீதியில் ஆய்கிறார் காமன்வெல்த் மாநாட்டை.

கொழும்புவில் காமன் வெல்த் நாட்டினர் கூடுவது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இரு தன்மைகளைப் பிரதிபலிக்கிறது. ஒன்று, ஆசியாவிலும் தூர கிழக்குநாடுகளிலும் தோன்றியிருக்கும் விடுதலை இயக்கங்களை யெதிர்த்து மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தும் முயற்சி. இரண்டு, அமெரிக்கச் செல்வாக்கை யெதிர்த்து நடந்துகொள்வதின் மூலம் பிரிட்டனின் பலக் குறைவான நிலைமையை சரி செய்து சொள்ளும் முயற்சி.

"நிகழ்ச்சி நிரல் வெளியிடப் பெறவில்லை யெனினும், கம்யூனிஸத்தை யொழித்துக் கட்டுவதற்காகத் திட்டம் திட்டுவதே மாநாட்டின் முக்கிய நிகழ்ச்சி யெனப் பத்திரிகைக் குறிப்புகள் கூறுகின்றன."

காமன் வெல்த் மாநாட்டின் அந்தரங்கம் நாளடைவில் தானாகவே வெளியாகி விட்டதெனினும், பிரிட்டனின் 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடித்து வீழ்த்தும் தந்திரம்' இம் மாநாட்டில் இரண்டறக் கலந்து நிற்பதை 'பிராவ்தா' தெளிவு படக்குறிப்பிட்டுள்ளது. ஆசிய நாடுகளிலும் கீழ்க்கோடி நாடுகளிலும் பரிணமித்து நிற்கும் மக்கள் விடுதலை இயக்கங்களை முளையிலேயே கிள்ளி எறியு சட்டத்தை மனதிற்கொண்டு, தனது ஏகாதிபத்தியம் என்றென்றும் நிலை பெறுவதற்கான வஞ்சகக் கொள்கையை வரையறுத்து வைத்துக் கொண்டு, உறவு-நேயமானா டென்ற பெயரால் காமன் வெல்த் மாநாட்டைக் கூட்டியுள்ளது பிரிட்டன். குவலயத்தைக் கட்டியாள வேண்டுமென்ற பேராசையை மனதிலடக்கி, 'குடும்ப உறுப்பினர்கள்' கூடுகின்றனரெனக் கூறிக் கொள்கிறது பிரிட்டன். காமன்வெலத் மாநாட்டைக் கூட்டியுள்ள பிரிட்டனின் இன்னொரு தந்திரத்தையும் எடுத்துக்காட்ட மறக்கவில்லை 'பிராவ்தா' உலக நாடுகளிடையே பணம் படைத்த அமெரிக்காவின் செல்வாக்கு நிறைந்து வருகிறது. சோஷலிஸ்டு வீரர் நேரு உட்பட ஆசிய நாடுகளின் தலைவர்கள் பற்பலரும் மயங்கிவிடுகின்றனர், அமெரிக்காவின் கண்வீச்சில்! இது கண்டு வாளாயிருக்க முடியவில்லை பிரிட்டனால். பிரிட்டிஷ் ராஜ்யம் சிறுகச் சிறுகத் தேய்ந்து வருவதோடு, அதன் செல்வாக்கும் சரிந்து வருவதறிந்து மனம் பொறுக்க முடியவில்லை பிரிட்டனால். எனவே, தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ள, ஆசிய நாடுகளிடையே தன்மாட்டு அன்பு பரியாதையேற்படச் செய்ய, அமெரிக்காவுக்குக் கோஷ்டி பலத்தையுணர்த்த இக்காமன்வெல்த்மாநாட்டை இவ்வளவு அக்கரையுடனேற்பாடு செய்துள்ளதுபிரிட்டன்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் அமெரிக்கப் பணநாயகத்துக்கும் பொது எதிரியாகக் காணப்படும் கம்யூனிஸம், அவ்விரு பெரும் நாடுகளுக்கேயன்றி, காமன்வெல்த் நாடுகளின் தன்னிச்சைத் தலைவர்கட்கும் தீராத தலைவலியாயிருந்து வருகிறது! பசித்து, பசித்து ஒட்டிப்போன வயிற்றிலிருந்து முளைத்துத் திகழும் கம்யூனிஸத்தைக் கொழும்புவில் கூடியிருக்கும் காமன் வெல்த் நாட்டுத் தலைவர்கள், எந்த அளவுக்கு விரட்டப் போகின்றனரென்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## திபேத் கேந்திரப் பகுதிகள் கம்யூனிஸ்டுகள் வசம்!

—:(o):—

### டலாய்லாமா படை திரட்டுகிறாராம்

—:(o):—

### அமெரிக்க உதவியையும் பெற ஆலோசனையாம்

லண்டன், ஜன. 9—

திபேத்தின் கிழக்கு எல்லைக் கருகில் பல கேந்திரப் பகுதிகளைப் பிடித்துக்கொண்டு விட்டதுடன், நான்கு வழியாக திபேத் மீது கம்யூனிஸ்டுகள் படையெடுக்கலாம் என்ற செய்தி கிடைப்பதாலும், செஞ்சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையே திபேத் நடுநிலைமை நாடாக நீண்டகாலம் இருக்கமுடியாது என்ற அபிப்பிராயம் இங்குள்ள வட்டாரங்களில் வலுத்துவருகிறது.

கம்யூனிஸ்டு படை சேனாதிபதி வியூபோ 'நமது அடுத்த வேலை திபேத்தை விடுதலை செய்வதே' என்று குறிப்பிட்டிருப்பதாக பீப்பிங் ரேடியோ வேறு அறிவித்திருக்கிறது.

திபேத்திலுள்ள முன்னாள் பிரிடிஷ் ஏஜண்ட் டேவிட் மாக்டனலட் கூறுவதாவது:- திபேத் மீது படையெடுப்பு எப்பொழுதுவேண்டுமானாலும் ஏற்படலாம் என்று, லஸாவிலுள்ள லாமாக்கள் கருதுகின்றனர். கடைசி ஆள் உள்ளவரை கம்யூனிஸ்டுகளை எதிர்ப்பது என்று அவர்கள் உறுதி கொண்டிருக்கின்றனர்.

15 வயதுள்ளடலாய்லாமா 20 000 துருப்புகளைத்திரட்டும்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறார். தலாய லாமாவுக்கு எதிராக உள்ள பஞ்சன லாமாவை அவருக்கு எதிராகக் கிளப்பிவிட்டு, அதனால் தாங்கள் சாதகமடைய கம்யூனிஸ்டுகள் திட்டம் போட்டிருப்பதாகத் தெரிகிறது.

திபேத் மடங்களிலுள்ள சன்யாசிகளும் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரமாக செய்து வருகின்றனர்.

யுனைடெட் ஸ்டேட்ஸின் உதவியைக் கோருவது பற்றியும் திபேத் மந்திரி சபை தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

## எரீட்ரியாவில் நெருக்கடி நிலைமை முற்றுகிறது

கெய்ரோ, ஜன. 9—

எரீட்ரியாவில் நெருக்கடியான நிலைமை முற்றிவருகிறதென்றும், 51 பயங்கர இயக்கத்தினரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 2035 பவுன்கள் பரிசு பகிர்ந்தளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் இங்கு செய்தி கிடைத்திருக்கிறது. சரணடையும் பயங்கரவாதிகளுக்கு மன்னிப்பு அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## மனைவிமார்கள் ஸ்டிரைக்!

ரோம், ஜன 9—

தங்களுக்கு வேண்டிய நர்ஸை பேத்தன் வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று மாண்டிபிளனிமோ இதாலிய கிராமத்திலுள்ள சுமார் 300 மனைவிமார்கள் வற்புறுத்தித் தன் கணவன்மார்களுடன் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தி வருகின்றனராம்.

கிராமத்திலுள்ள நர்ஸ் நாங்ஜோவிச் சென்றிருந்த போது, அவருக்காக ஆக்டிங் வேலை செய்த மற்றொரு நர்ஸை கிராமத்திலுள்ள பெண்களுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டதாம். பழையபடி நாங்ஜோவிலிருந்து திரும்பிவந்ததும் புது நர்ஸை வேலையிலிருந்து அனுப்பக் கூடாது என்று கூறப்பட்டதாம்.

இவ்விஷயமாக மனைவிமார்கள் தங்கள் கணவர்களிடம் தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். இவ்விஷயத்தில் தாங்கள் எதுவும் செய்வதற்கில்லை என்று அவர்கள் கைவிரித்துவிட்டார்கள். ஆகவே தன் கணவர்களையும் டாக்டரையும் எதிர்த்து அவர்கள் 'ஸ்டிரைக்' ஆரம்பித்துவிட்டனர்.

## மூன்றாவது உலகப் போரை மூளாமல் தடுக்க வழி!

### காமன்வெல்த் மாநாட்டில் விவாதித்து வகுக்கப்படுமாம்

கொழும்பு, ஜன. 9—

இன்று கொழும்புவில் கூடும் காமன்வெல்த் மாநாட்டு நடவடிக்கைகளில் கலந்து கொள்ள பிரதிநிதிகளும், அவர்கள் ஆலோசகர்களுமாக சேர்ந்து சுமார் 144 பேர்கள் வந்து சேர்ந்திருக்கின்றனர்.

உலகில் சமாதானம் நிலவுவதற்கு இம்மாநாடு வழிகோலுவதாக இருக்கும் என்று, தான் நம்புவதாகவும் தோழர் பெவின் கூறினார்.

தோழர் நோவால் பேக்கர் கூறியதாவது:—இம்மாநாட்டின் முன்புள்ள பிரச்னை உலகின் முன்புள்ள பிரச்சினையாகும். மூன்றாவது உலகப் போரை நாம் எப்படித் தவிர்க்கப் போகிறோம் என்பதே நம் முன்புள்ள முக்கியப் பிரச்சினை, கம்யூனிஸம் தலைதூக்காமல் செய்யப் பொருளாதார நிலைமையை எப்படி நாம் உயர்த்தப்போகிறோம்.

பஸிபிக் ஒப்பந்தம் ஏற்படுவது அட்லாண்டிக் ஒப்பந்தம் எப்படி நடைபெறுகிறது என்பதைப் பொறுத்தது என்றும் அவர் கூறினார்.

### உடனடியாக ராணுவ உதவி

இந்தோனேஷியா, கொரியா, பிலிப்பைன்ஸ், இந்தோ சீன நிலைகளுக்கு உடனடியாக ராணுவ உதவி இத்திட்டத்தின்மூலம் அளிக்கப்படும் எனத் தெரிகிறது.

கொடுக்கப்படக்கூடிய இதர உதவி விவரங்களாவன:— ஏற்றுமதி இறக்குமதி பாங்கி மூலம் இந்தோனேஷியாவுக்குக் கடன் உதவி, நேரிடையாக சிறு தொகை கடன்களை இராணுவங்களுக்குத் தேவையின் அவசியத்தைப் பொறுத்து அளிப்பது. மேற்கு பசிபிக்கில் யு.எஸ். கடற்படை பலத்தை அதிகரித்து பாதுகாப்பு அளிப்பது, பொருளாதாரத் துறையில் ஒத்துழைப்பு நிர்வாகத் திட்டம் ஜப்பானுடன் பொது சமாதான உடன்படிக்கை.

கொழும்பு மாநாட்டில் ஆலோசிக்கப்படும் விஷயங்களில் விசேஷித்தை வாஷிங்டனில் காட்டப்படுகிறது.

## கிழக்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்டு ஆதிக்கம் வளர்கிறதாம்!

### சர்க்கார் பதவிகளிலெல்லாம் 'அவர்களே' என ஓலம்!

பெர்லின், ஜன. 9—

கிழக்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்டு ஆதிக்கம் அதிகரித்து வருகிறதென்றும், கம்யூனிஸ்டுகள் ஏகமாக சர்க்கார் பதவிகளில் அமர்த்தப்பட்டு வருகின்றனர் என்றும், மந்திரிகளால் இதைத் தடுக்கமுடியவில்லை என்றும் கிருஸ்துவ ஜனநாயகக் கட்சித் தலைவர் ஹெர்ஹாஷ்கே என்பவர்கூறுகிறார்.

# மாலை மணி

சென்னை 10—1—50 செவ்வாய்க்கிழமை


## கொடுமைக்குப் பெயர்தான் சகித்தலா?

பழைமையின்பாதுகாவலர்-வைதிகத்தின் வியாக்யான கர்த்தா-சனாதனவீரர்-வருணாச்சிரம தர்மத்தை நிலைநாட்டும் தீரர்-கண்ணன் காட்டிய வழியைச் சுட்டிக் காட்டும் சூரர்-சாணக்கிய பரம்பரை ஆகிய சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார், இந்து மதத்தின் 'சிறப்புகளை'ப் பற்றி, உலக மதங்கள் சங்க காங்கிரஸ் கூட்டத்தில் விதந்தோதியுள்ளார்.

இந்து மதத்தைப் பற்றிஅவர் வியாக்யானம் செய்துள்ளார்; கருத்து உண்மைக்கு மாறுபட்டுக் காணப்படினும், அப்படி வியாக்யானம் செய்வது அவரது வழக்கத்திற்கு ஒட்டியதுதான்!

இந்து மதம் சகிப்புத் தன்மையைத்தான் பிரதானமாகக் கொண்டதாகும் என்று இந்திய கவர்னர் ஜெனரல் விளக்கவுரை தருகிறார். விளக்கம் அத்தோடு நின்றுவிடவில்லை; மேலும் செல்லுகிறது. "இந்து மதக் கோட்பாடு, வெறும் இறுமாப்பால் அமைந்ததல்ல, ஆனால் அடக்கம் பணிவுடன் சேர்ந்து அமையப் பெற்றதாகும்" என்று கொண்டு செல்கிறார். புகழுரையை அந்த அளவோடுகூட நிறுத்தமனமில்லை. இந்து மதத்திற்கு இருக்கும் இந்த 'அரிய' பண்பு வேறு எந்த மதத்திற்கும் இருக்கவில்லை என்று சொல்லிப் பூரிப்படைகிறார். ஆச்சாரியார் கூறும் இந்த 'அரிய' பண்பு எந்த அளவுக்கு உண்மையுடையதாய் விளங்குகிறது என்பதற்கு, பிரம்ம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரர் என்ற நான்கு வருணங்களும் தீண்டப்படாதோர் என்ற ஐந்தாவது வருணமும் இருந்து வருவதே போதிய சான்றாக இருக்கக் கூடுமே! மிருகத்தினும் கேடுகெட்ட நிலையில் ஒரு பகுதி மக்களை விலக்கி வைத்து, அவர்களைத் தீண்டப்படாதவர்கள் என்று அழைத்து, கொடுமைகள் பலவற்றிற்கும் ஆளாகும்படி செய்த இந்து மதமா சகிப்புத் தன்மையைக் கொண்டது? ஜாதிக்கொரு நீதி வகுக்கும் மனுதர்மத்தைத் தன்னுடைய சாஸ்திரமாகக் கொண்டுள்ள இந்து மதமா சகிப்புத் தன்மையைக் கொண்டது? வேறு மதத்தைச் சார்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக எண்ணாயிரம் சமணர்களைக் கழுவிலேற்றிய மதமா சகிப்புத் தன்மை கொண்டது? வேறு மதக்காரர்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்து, கோயில்களை இடித்துத் தள்ளி, தன் மதக் கடவுளர்க்கு அந்த இடங்களில் கோயில்கள் கட்டிக்கொண்ட மதமா சகிப்புத் தன்மை கொண்டது? இந்தியத் துணைக் கண்டத்தின் அறிவு வளர்ச்சியை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத்தடைப்படுத்தி அறிவுக் கொலை செய்து வரும் மதமா சகிப்புத் தன்மை கொண்டது? இவ்வளவு உண்மைகளையும் மறந்து, இல்லை, இல்லை, மறுத்து இந்து மதத்திற்குப் பொய்ப் பெருமை தேடித்தர ஏனோ ஆச்சாரியார் இந்த பாடு படுகிறாரோ தெரியவில்லை.

இந்தியத் துணைக்கண்டத்தில் வளர்ந்தோங்கி செழித்திருந்த புத்த சமண மதங்களை அடியோடு அழித்து ஒழிப்பதற்கு, இந்து மதம் கையாண்ட கொடுமைகள் ஒன்றிரண்டல்லவே! தமிழரின், திராவிடரின் தனிப்பண்புகளை அழித்துத் தன் மதக்கருத்துக்களைப் பரப்ப இந்து மதம் கையாண்ட வஞ்சகத்தன்மைகள் ஒன்றிரண்டல்லவே! இவ்வளவுக்கும் பிறகு ஆச்சாரியார் கூறுகிறார்; சகிப்புத் தன்மைதான் இந்துமதத்திற்குப் பிரதானமானது என்று, அவர் கூற்று இந்து மதம் தழைத்தோங்கி வளரவேண்டுமென்பதிலே அவருக்குள்ள அக்கரை எத்தனை அளவு சிறந்து காணப்படுகிறது என்பதை விளக்கி நிற்கின்றதேயல்லாமல், உண்மை நிலையை விளக்குவதாகக் காணக்கூடவில்லை!

இதர நாடுகளில் வளர்ந்துள்ள மதங்கள் போதிக்கும் சித்தாந்தங்கள் வெறும் பரஸ்பர விரோதத்தை ஏற்படுத்தி, விட்டனவாம் இந்நாட்டில் பலவேறு மதங்கள் இருந்தும் சகிப்புத்தன்மை அபிவிருத்தியடைந்திருக்கிறதாம். இந்து மதத்தின் சகிப்புத்தன்மை எந்த அளவுக்கு கேலிக்கூத்தாக இருக்கிறது என்பதைத்தான், இரண்டாண்டுகளுக்கு முன் நடைபெற்ற இந்து முஸ்லீம் கலவரங்களினால் ஏற்பட்ட பிணக்குவியல்களையும் குருதியோட்டத்தையும், பொருள் நஷ்டத்தையும் கண்டு தெளிவு பெற்றிருக்கிறோமே! இன்றும் போராட்டவெறியுணர்ச்சியைக் கிளப்புபவர்கள், இந்து மதத் தலைவர்களாகவே இருப்பதைக் காணும்போது, இந்துமதத்திற்குச் சகிப்புத்தன்மை உண்டு என்று எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

ஆதிநாள் தொட்டு இதுநாள் வரையில், உலக வரலாற்று ஏட்டுச்சுவடியைப் புரட்டிப் பார்த்தால் மதங்கள் மக்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகளாக இருந்து வருகின்றனவே யல்லாமல், முன்னேற்றத்திற்கு வழி வகுப்பனவாக இருக்கவில்லை. குறிப்பாக இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரையில், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அறிவுக் கொலை செய்து வருவது இந்து மதமேயாகும். அது என்று அழிந்து, விஞ்ஞானம் அந்த இடத்தைப் பெறுகிறதோ, அன்று தான் நாடு சகிப்புத் தன்மைகொண்ட அறிவுடம்பட்ட நிலைமையைஎய்துவதாகக்கொள்ளமுடியும்.

குருடனை நல்லக்கண்ணு என்றும்,கறுப்பனைச் சிவப்பன என்றும், அழகற்றவனை அழகு வல்லி என்றும், கருமியை அன்னபூரணி என்றும்அழைப்பது போல, இந்துமதத்தைச் சகிப்புத்தன்மையுள்ள மதம் என்கிறார் ஆச்சாரியார்! கொடுமைபுரிவதற்குப் பெயர் தான் சகிப்புத்தன்மை என்றால் இந்து மதத்திற்கு அப்பெயர் முக்காலும் ஏற்கும்!

## சாம்ராஜ்ய வெளிநாட்டு மந்திரிகள் மாநாடு, சதிகாரக்கூட்டமே!

### தர்மோபதேசம் செய்துவிடுவதால் குறைபாடுகள் நீங்கிவிடுமோ?

### ஒரு சிலர் நன்மைக்குத்தான் அரசாங்கமெனின், அது ஒழிக!

### இலங்கை முன்னணிக் கட்சியினர் முழக்கம்!

கொழும்பில் நடைபெறும் சாம்ராஜ்ய வெளிநாட்டு மந்திரிகள் மாநாடு ஒரு சதிகாரக் கூட்டமாகும். அடுத்த போரின் போது முன்னேறி வரும் இந்தியா உதவியைப் பெறுவதற்கும், ஆசியா நாடுகளின் பொதுமக்கள் கிளர்ச்சியை அடக்குவதற்கும் வழி வகைகளைத் தேடுவதுமே இம் மாநாட்டின் நோக்கமாகும் என்று, தொடன்வெல் ஐக்கிய வாலிபர் முன்னணிக் கட்சி மாநாட்டில் டாக்டர் சிரிசேவலி பிக்கு கூறினார்.

கண்டி ஜனப் பிரதிநிதி உறுப்பினர் திருமதி தமரா குமாரி இலங்கரத்ன மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

இலங்கையைப் போன்ற சமய பக்தியுள்ள நாட்டை வேறெங்கும் காணமுடியில்லை யென்று கூறிய சிரிசேவரி பிக்கு இந்நாட்டில் பயங்கள் அதிகரித்து வருவதற்கு முக்கிய காரணம் மக்களிடையே நிலவும் வறுமையும், கல்வியறிவு இன்மையுமே யென்று குறிப்பிட்டார்.

இன்று அதிகரித்து வரும் பயங்கரக் குற்றங்களை ஒழிப்பதற்கு தர்மோபதேசம் செய்வது மட்டும் போதாது, அது பலனளிக்காது என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

வாலிபர் முன்னணியின் தலைவர் மாநாட்டிற்கு சமூகமளித்த பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினார்.

அரசாங்கம் ஒரு சில குடும்பங்களின் நன்மைக்காக மட்டுமே இயங்குமானால், அதை ஒழித்துக்கட்டி பொது மக்களின் நலத்தையே அடிப்படையாகக் கொண்ட ஜன நாயக அரசாங்கத்தை நிறுவிக்கொள்வது பொது மக்களின் விலக்க முடியாத கடமையெனக் கூறிய தோழர் டி. பி. இலங்கரத்ன இன்றைய அரசாங்கம் வருமான வரி செலுத்துபவர்களின் சுக போக நன்மைகளுக்காகவே இயங்குகிறதே யொழிய, எஞ்சிய பெரும்பாலோரின் அத்தியாவசியத் தேவைகளை வேண்டுமென்றே அலட்சியம் செய்கிறதென்று எடுத்துக் காட்டினார்.

### அறிவுக் கதிர்!

மனிதருக்குக் கொடுமையான சத்துருக்கள் மடமையும், மூடநம்பிக்கையுமே. இவைகளை வேரறுத்துக் களைத்தெறிவோர்க்குரிய கூரிய ஆயுதங்கள் உண்மையும், பகுத்தறிவுமே.

—லெக்கல்

## மதங்களால் குற்றமில்லை மதஸ்தாபனங்கள்மீதுதான் குற்றமாம்!

### மதங்கள் பற்றி தோழியர் அமிர்தகௌரி கருத்து

"உலகை விட்டு யுத்த பயம் நீங்க வேண்டுமானால், மதத்தின் உண்மையான தாத்பரியத்தை சகலரும் புரிந்து கொள்ளவேண்டும்"

மதத்தினால் கெடுதலில்லை. மத ஸ்தாபனங்களின் போக்கினால்தான் கெடுதிகள் ஏற்படுகின்றன. யுத்த பயத்தைப் போக்கவேண்டியதே நமது முக்கிய கடமை.

என்று இந்திய சுகாதார அமைச்சர் தோழியர் ராஜ்குமாரி அமிர்த கவுரி, அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற சர்வமத மாநாட்டில் பேசியிருக்கிறார். அம்மையாரின் பேச்சு அழகாகத்தானிருக்கிறது. ஆனால் மதம்பற்றி அம்மையார் கூறியிருக்கும் இதே கருத்துக்களைத்தான் பலகாலமாக மதத் தலைவர்கள் பலரும் வெளியிட்டு வருகிறார்கள். உண்மையிலேயே ஒருருவம், ஒரு நாமம் ஒன்றுமில்லாத கடவுள் வழிபாட்டைக் கைக்கொள்ளும் இஸ்லாம் மதமும் இதையேதான் சொல்லுகிறது. பல உருவம், பல கடவுள்கள், பல நாமம்என்றமுறையிலே பேசிக்கொண்டிருக்கும் இந்துமதமும் இதையேதான் சொல்லுகிறது. கிருஸ்தவ மதமும் இதையேதான் சொல்லுகிறது. எல்லா மதத்தினருக்கும் ஆண்டவன் ஒருவனே என்றுதான் ஒவ்வொரு மதத்தினரும் சொல்லுகிறார்கள். தோழியர் அமிர்த கவுரிகூட மேலும்பேசிய போது "மசூதிகளிலும், ஆலயங்களிலும் மாதா கோவில்களிலும் ஒரே கடவுளைத்தான் நாம் வணங்குகிறோம். நாம் வணங்கும் முறை எப்படியிருந்தாலென்ன?" என்று கூறியிருக்கிறார். ஆனால் நடைமுறையில் மதம் மக்களுக்கு நன்மை செய்திருப்பதாகவே, செய்ததாகவோ இதுகாறும் அறுதியிட்டுக் கூறமுடியாத நிலைமையில் இருக்கிறது உலகம்.

மதம் நல்லதுதான், மதஸ்தாபனங்களின் போக்குதான் குற்றமுடையன வென்றால், அந்தக் குற்றங்களைப் போக்கி மதத்தை அப்பழுக்கற்றதாக்க முடியாமலிருப்பது ஏன்? [illegible] காலந்தொட்டு முடியவில்லையென்றும், சமயத்தை நன்கறிந்த முனிவர்கள் மகரிஷிகளாலேயே முடியவில்லையே! அவர்கள் காலங்களிலும் அனாசாரங்கள் இருக்கத்தான் செய்தன? பஞ்சமா பாதகங்கள் என்று சொல்லப்படும் பாவச் செயல்கள் அன்றும்தான் இருந்துகொண்டிருந்தன என்பதற்குப் புராணங்களே போதிய சான்றுகளாகும். அத்தகைய நிலைமையைப் போக்க எந்தமதத்தினாலும் முடியவில்லை, மதங்களுக்குள்ளேயே போர் மூண்டவண்ணமிருந்தது என்பதற்குச் சரித்திரத்தில் சான்றுகள் பல காணக்கிடக்கின்றன.

ஏன், வேறு நாம் போவானேன், இந்திய அரசியலைக் கவனித்தாலே இந்த உண்மை தெரியவரும். பண்டு தொட்டு பாக்கிஸ்தான் அமைந்த காலம் வரை பல போராட்டங்கள் நிகழ்ந்திருப்பது கண்கூடு, இதெல்லாம் எதனால்; இவை தரும் பாடம் என்ன? என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கின்றபோதுதான் மதங்களையே நாம் குறைகூற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மதம் மக்களின் அறியாமையின் மீது கட்டப்பட்டச் சுவர். அச்சுவற்றை நம்பி மக்களின் வாழ்க்கை நலத்தை நிர்ணயிக்க முடியாது. அறிவுத் துறையிலே விளக்கமும், சமுதாய பொருளாதாரத் துறையில் சமத்துவமும் ஏற்படாத வரை மக்கட் சமுதாயம் நல்வாழ்வு வாழ முடியாது.

எனவே மதத்துக்குமாத்திரம் மகத்துவம் கற்பித்து விட்டு, மதஸ்தாபனங்கள் மீதும் சமுதாயத்தின் மீதும் பழி சுமத்துவதில் பயனில்லை. மதத்தில் குற்றமில்லை, மதஸ்தாபனத்தில்தான் குற்றம் என்று பேசுவது வெறுந்தாப் பேச்சு. மதம் ஊழல்களுக்கு இடமளிக்கின்ற காரணத்தால்தான் மதஸ்தாபனங்களிலும் ஊழல்கள் மிகுகின்றன. ஆகவே உண்மையிலேயே ஊழல்களற்ற நிலை ஏற்பட வேண்டுமானால், மதக்கூடங்கள் விஞ்ஞான நிலையங்களாக மாறுவதுதான் நலம், செயற்பாலது.

---

கெய்ரோ, ஜன. 9—

சூயஸ்—இஸ்மாலியா பட்டணங்களில் [illegible] சேர்ந்ததாகும் என்று இப்பொழுது கூறப்படுகிறது. [illegible] கொண்ட [illegible] இருக்கிறதாம்,

# மதசார்பற்ற சர்க்கார் மதத்தைமட்டும் மறக்கமாட்டார்களாம்!

## காங்கிரஸ் ஆட்சி ஒரேகட்சி ஆட்சியல்லவாம்!

———(0)———

### முன்னுக்குப்பின் முரண்பட்ட ஆட்சிமுறைக்கு தோழர் சந்தானம் சப்பைக்கட்டு

மதச்சார்பற்ற அரசாங்கமென்ருல் மதத்தையே மறந்துவிட வேண்டும் என்பது அர்த்தமல்ல. பிறந்த மதம் இவற்றில் வித்தியாசமின்றி பொருளாதார, சமூக, அரசியல் வழிகளில் இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களும் சமமாகக் கருதப்படுவதே மதச்சார்பற்ற இந்தியாவின் இலட்சியம்.

பேச்சுரிமைக்கு ஜனநாயகத்தில் பூரண வசதியுண்டு. ஆனல் தண்டவாளங்களைப் பெயர்த்தல், சர்க்கார் காரியாலயங்களுக்குத் தீ வைத்தல் போன்ற நாச வேலைகளுக்கு இடமில்லை.

காங்கிரஸ் கட்சிகளுக்குள்ளேயே பல்வேறு கோஷ்டிகள் இருப்பதால், காங்கிரஸ் ஆட்சியை நடுக் கட்சி அரசாங்கம் என்று கூறுவது சரியல்ல. ஒரு கட்சியின் ஆதிக்கம் என்று சிலர் பறை சாற்றுவது பொருத்தமற்றது.

என்று இந்திய ரயில்வே அமைச்சர் தோழர் கே. சந்தானம் அண்மையில் தாம்பரம் கிருத்தவ கல்லூரியில் பேசிய போது குறிப்பிட்டிருக்கிறார்.

மதச்சார்பற்ற ஆட்சியென்ருல் மதத்தையே மறந்துவிடவேண்டும் என்பது பொருளல்ல என்கிறார் அமைச்சர்.

ரொம்ப சரி, மதத்தை மறக்க வேண்டாம். ஆனல் மதத்தை மறவாதிருந்து மதச் சடங்குகளுக்கு இடமளித்துக் கொண்டேயிருந்தால், வேறு மதத்தினரிடையேயும் எங்ஙனம் கருத்து ஒற்றுமை ஏற்பட முடியும்? இவ்விந்திய உபகண்டம் பல்வேறு மதக் கருத்துக்களைக் கொண்டது. அதுவேயல்லாமல் மதச் சடங்கு முறைகளும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதனவாயிருக்கின்றன. அன்றி —முரண்பாடுடையனவாகவுமிருக்கின்றன. இங்ஙனம் முரண்பாடுடைய சடங்குகளுக்கு அரசியலாரே இடமளித்துவந்தால் ஒன்றுக்கொன்று மோதுதல் விளையாதிருக்கும் என்று எப்படிச் சொல்ல முடியும்?

எனவே, ஒரு சர்க்கார் உண்மையிலேயே மதச்சார்பற்ற சர்க்காராயிருந்தால், எந்த மதமோ மக்களுடைய பொதுவாழ்வில் சம்பந்தப்படக்கூடாது: மத சம்பந்தம் பற்றிய பழக்கவழக்கங்கள், குறிகள், சடங்கு முறைகள் முதலியன அவரவர் வீட்டோடு நின்றுவிடவேண்டும். அவைகளை எவ்விதத்திலும் வெளியில் காட்டக் கூடாது என்று அரசியலார் உத்தரவிட வேண்டும். இதுவே மதசார்பின்மை சர்க்கார் மதித்து நடந்துகொள்ளமுடியாது.

மதத்தைப் போற்றுவதாரான மதமாகப் போற்ற பூசை செய்வோர் செய்யட்டும், ஆண்டவன் பெயரைச் சொல்லி ஆடிப்பாடி ஆனந்தக் கண்ணீர் வடிப்பவர் வடிக்கட்டும். ஆனல் அவைகளனைத்தும் அவரவர் வீட்டு வாயிற்படியைத் தாண்டி வெளியில் தலைகாட்டக் கூடாது. அதுமட்டுமல்ல, மதம் சம்பந்தமாக நாட்டு மக்களின் உழைப்போ, பொருளோ ஒரு சிறிதுகூட செலவிடப்படக் கூடாது. மத ஸ்தாபனங்களில் பொன்னும் பொருளும் குவிந்து வீணே கிடக்க இடந்தரலாகாது. ஆண்டவனுக்குப் பொன்னும் பொருளும் தேவையில்லை யென்பது அரசியலாருக்குத் தெரியாத விஷயமல்ல.

ஆனல், இந்திய சர்க்காரைத் மதச்சார்பற்ற சர்க்கார்தான் என்று மார் தட்டிப் பேசுபவர்கள், இவற்றையெல்லாம் கவனிக்கிருர்களா? இல்லையே! அதற்கு மாருக மத ஸ்தாபனங்களுக்கு ஊக்கமளிக்கவன்ருே நினைக்கின்றனர்!? மத ஸ்தாபனங்களில் வீணே குவிந்து கிடக்கும் பொருள்களைத் தீண்டவும் பயப்படுகின்றனர்! அதுமட்டுமின்றி, மத விழாக்களுக்கும் பொது விடுமுறையளிக்கின்றனர்!! சிறப்பாக இந்துமதமென்ருல் சலுகைகாட்டுகின்றனர்!!! இவையனைத்தும் எதனை விளக்குவதாகும் என்று, மதச்சார்பற்ற சர்க்காரின் மகத்துவம் பற்றி மாணவர்களிடையே பிரசாரம் செய்ய முன்வந்திருக்கும் தோழர் சந்தானத்தைக் கேட்கிருேம்.

அடுத்தபடியாக ஜனநாயகம் பற்றி அவர் பேசியிருப்பதும் கவனிக்கவேண்டியதாகும். பேச்சுரிமைக்கு ஜனநாயக ஆட்சியில் பூரண உரிமையுண்டாம். தண்டவாளம் பெயர்த்தல், தீ வைத்தல் போன்ற நாசவேலைகளுக்குமட்டும் இடமில்லையாம். இதுவும் சரியே; அமைச்சரின் இந்த அறிவுரையையும் ஏற்றுக்கொள்வோம். ஆனல் இத்தகைய அறிவுரை கூறும் அமைச்சரைக் கேட்கிருேம், இந்த நாட்டில் நாசவேலைகளுக்கு மதிப்பு ஏற்படும்படியான நிலைமை உண்டுபண்ணியவர் யாவர்? இன்று நாடாளும் காங்கிரஸ் கட்சியினர்தானே அன்று இந்த நாச வேலைகளுக்கு அச்சாரம் போட்ட புண்ணிய மூர்த்திகள்! இங்ஙனம் அன்று நாச வேலைகளுக்கு வழி வகுத்துவிட்டு, இன்று அதனைக் கண்டிப்பதில் என்ன பொருள் இருக்க முடியும் என்று கேட்கிருேம். அதுமட்டுமல்ல, இந்தகைய ஜனநாயகம் பேசும் அமைச்சர்கள் நாசவேலை செய்வோரை மதிக்கும் அளவுக்கு உண்மையான ஜனநாயகத்தில் நம்பிக்கையுடையோரை மதித்து நடக்கிறர்களா என்று கேட்கிருேம். ஜனநாயகம் என்று பேசுபவரேதான் கிடைக்கிறதே என்றி, கண்ட முறையில் காணப்படும் தில்லையே எதையும் சொண்டிச் சாக்குகள் கூறி, அமைதி குலைவு என்று சொல்லி, கொண்டு எதிர்க்கட்சிகளுக்குத் தடை புத்தரவு, எதேச்சாதிகார முதல் செய்தல், பத்திரிகைகளை பறிமுதல் செய்தல், 144 போட்டி சட்டம் கூடாததை செய்து, அதன் மூலம் மாற்றுக் கட்சிக் கருத்துகளுக்கும் மக்களுக்குமிடையே திரை போட்டு மூடிவிடுதல் போன்ற ஆர்ப்பாட்டங்கள் தானே நடைபெறுகின்றன!

இங்ஙனமெல்லாம் பலமுறை அடக்கி ஒடுக்கப் பார்க்கின்றனர் ஜனநாயக அடிப்படையில் வேலை செய்வோரை. சரி, ஜனநாயகத்துக்குத்தான் இடமில்லையே என்று நினைத்து பாரேனும் அன்று காங்கிரஸ் கற்பித்த பாடத்தையே திரும்பி ஒப்புவிக்க முன் வந்தால், நாச வேலை புரட்சி என்று சொல்லி அவர்களையும் அடக்கி விடுகின்றனர்.

இங்ஙனம், முன்னல் சென்ருல் முட்டுவது, பின்னல் சென்ருல் உதைப்பது என்ற விசித்திர மனப்பான்மையுள்ள ஒரு ஆட்சியில் மக்கள் எங்ஙனம் அமைதியாக வழமுடியும்? இதனை எங்ஙனம் ஜனநாயக ஆட்சி என்று சொல்ல முடியும்? அடக்குமுறைக்கும் பயந்து இதனை ஜனநாயக ஆட்சி யென்று மக்களுடைய வாய் சொன்னலும் மனம் இதனை சர்வாதிகார ஆட்சி யென்றுதானே நினைத்துக் கொண்டிருக்கும். அந்த நினைப்பு நீடித்தால் நிலைமை என்ன வாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா அரசியலார்? இன்று இந்திய அரசியலார் போகின்ற போக்கைப் பார்த்தால், இதை யெல்லாம் அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதாகவே தெரியவில்லை. நடப்பது நடக்கட்டும், நாம் வைத்தது சட்டம், மிஞ்சி வந்தால் துப்பாக்கி இருக்கிறது, போலீஸ் இருக்கிறது, இராணுவம் இருக்கிறது ஒரு கை பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டு செயலாற்றுகிருர்கள் என்று, மக்கள் நினைக்கும்படியான நிலைமையில்தானே அரசியலாரின் அன்றாடப் போக்கு அமைந்திருக்கிறது? இந்நிலையில் சந்தானங்கள் ஜனநாயகப் பேசி மாணவர்களை ஏமாற்றிவிட முடியுமா?

கடைசியாக, காங்கிரசுக்குள்ளேயே பல கோஷ்டிகள் இருப்பதால்காங்கிரஸ்ஆட்சியை ஒருகட்சி ஆட்சி யென்று சொல்லக்கூடாது என்று கூறியுள்ளார். காங்கிரசுக்குள் பல கோஷ்டிகள் இருக்கும் ஒரே காரணத்தால் காங்கிரஸ் ஆட்சியை ஒரு கட்சி பாட்சி அல்ல என்று எப்படிக் கூறமுடியும்? காங்கிரஸ் என்பது ஒரு கட்சி. அந்தக் கட்சிக்குள் கோஷ்டிகள் இருப்பது நாமறியாததா? காங்கிரசில் லஞ்ச ஊழல், பதவி வேட்டை போன்றவைகள் அதிகரிக்க அதிகரிக்க கோஷ்டிகள் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கும். இதில் ஆச்சரியமென்ன? இந்த ஊழல் கோஷ்டிகளை எப்படி கட்சிகள் என்று சொல்லிவிட முடியும்? எல்லாம் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள் தானே! இந்த மட்டைகளிடையே காங்கிரஸ் கருத்துக்கு மாறுபட்டக் கருத்துகள் எப்படி நிலவ முடியும்?.

பொதுவாக ஒரு கட்சி யென்ருல் அதற்கென சில கொள்கைகள், திட்டங்கள் இருக்கவேண்டும். அதுபோலவே ஜனநாயக ஆட்சி யென்ருல் பல்வேறு கருத்துவேற்றுமை உடைய கட்சிகளுக்கு அதில் இடமிருக்க வேண்டும். அப்படியின்றி ஆளும் கட்சியின் கைப்பாவைகளே, அக்கட்சியின் அடிப்படைக் கருத்துக்கு மாறுபாடில்லா கட்சிகளோ எத்தனை கட்சிகள் இருந்தபோதிலும், அவ்வாட்சிமுறையை ஒரே கட்சியாட்சிமுறை என்றுதான் சொல்லவேண்டும்.

---

### லாபகர முதலைத்தோல் வியாபாரம்

லண்டன், ஜன 9

மலேயாவில் முதலைகளை வேட்டையாடி தொழில் நடத்தும் பீடர் பீட்டர்ஸ் என்பவரும், அவருடைய டச்சு மனைவியும் தங்களிடமுள்ள 5000 பவுன் பெறுமான முதலைத் தோல்களை விற்பதற்காக இங்கு வந்திருக்கிருர்.

தான் சுட்ட ஒவ்வொரு முதலையும் 50 பவுனுக்கு (ரு 650) விற்கப்பட்டதாக அவர் கூறுகிருர்.

---

### விசித்திர சகோதரர்களுக்கு ஆபரேஷன்

ஆட்டவா, ஜன. 9—

சுமார் 7 வாரங்களுக்குமுன் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொண்டு பிறந்த அபூர்வ சகோதரர்களுக்கு ஆல்பாட்டா ஆஸ்பத்திரியில் ஒரு அதிசய ஆபரேஷன் செய்யப்பட்டுஅக் குழந்தைகளைப் பிரிக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக இந்த ஆபரேஷனுக்குப் பின் குழந்தைகள் உயிருடன் இருப்பது அரிது.

---

### ராக்கெட்டினுல் ஓட்டப்படும் பிரிட்டிஷ் விமானம்

லண்டன், ஜன. 9—

உள்நாட்டுப் பாதுகாப்புக்காக ராக்கெட்டினுல் ஓட்டப்படும் பிரிட்டிஷ் விமானங்களை உற்பத்தி செய்ய உத்தேசித்திருப்பதாக பிரிட்டிஷ் விமான அதிகாரிகள் யுனைடெட் ஸ்டேட்ஸ் ராணுவ அதிகாரிகளுக்கு அறிவித்திருக்கின்றனர்.

இப்புது விமானங்கள் இன்னும் இரு வருடங்களில் உபயோகத்திற்கு வந்துவிடுமாம்.

---

### செஞ்சீனவை பிரிட்டன் அங்கீகரித்தது பற்றி 'அப்சர்வர்'!

லண்டன். ஜன. 9—

செஞ்சீனவை பிரிட்டன் அங்கீகரித்ததுபற்றி 'ஸண்டே அப்ஸர்வர்' எழுதியிருப்பதாவது:

இவ் விஷயத்தில் இன்னும் காலதாமதம் செய்திருந்தால் இந்தியாவுடன் ஒத்துப்போகாமல் தனித்து நிற்கும்படியான நிலைமை ஏற்படும். நமக்கு யுனைடெட் ஸ்டேட்ஸ் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் தான் இந்தியாவும். ஆசியாவிலுள்ள பிரிட்டிஷ் பிரதிநிதிகள் ஏகமனதாக ஒரு முடிவுக்கு வந்திருக்கும்போது அதை மீறி நடப்பது என்பது சாத்தியமில்லை.

---

### பிரான்ஸ் அங்கீகரிக்குமா ?

பாரிஸ், ஜன. 8—

சீனக் கம்யூனிஸ்டு சர்க்காரை இப்பொழுது இல்லாவிட்டாலும் இன்னும் சிலகாலம் பொறுத்தாவது பிரான்ஸ் அங்கீகரிக்கும்படியாகவே இருக்கும் என்று இங்குள்ள வட்டாரங்களில் நம்பப்படுகிறது. பாவ்டேயுடன் 9-மாதங்களுக்கு முன் செய்துகொண்ட உடன்படிக்கையைப் பிரஞ்சு பார்லிமெண்ட் அங்கீகரித்தபின் இவ்விஷயமாக பிரெஞ்சு சர்க்கார் முடிவு செய்யலாம் என்று தெரிகிறது.

---

### வியாகத் அலி மாஸ்கோ வருகை

மாஸ்கோவுக்குத் தனது பிரயாணத்துக்கான தேதி இன்னும் குறிப்பிடப் பெறவில்லை என பாகிஸ்தான் பிரதமமந்திரி தோழர் லியாகத் அலிகான் ஜன 4-ந்தேதி பண்டு பாகிஸ்தான் பார்லிமென்டில் குறிப்பிட்டார்.

---

## ஆசியாவில் கம்யூனிஸம் பரவுவதைத்தடுக்க அமெரிக்கத்திட்டம்

### அசிஸனின் புது யோசனைகள்

வாஷிங்டன், ஜன. 9—

ஆசியாவில் கம்யூனிஸம் பரவுவதைத் தடுக்க தான்வகுத்துள்ள புது திட்டத்தை யுனைடெட் ஸ்டேட்ஸ் ராஜாங்க மந்திரி டீன் அசிஸான் செனேட் அயல்நாட்டு உறவு கமிட்டி இரகசியக் கூட்டத்தில் வெளியிடவிருக்கிருர்.

இத்திட்டம் பற்றி குளோப் நிருபர் கூறுவதாவது:—மார்ஷல் உதவித் திட்டம் போலவோ, அரசியல், ராணுவ உடன்படிக்கைகளோ உத்தேசிக்கப்படவில்லை, ஆசிய நாடுகளில் பொருளாதார அரசியல் நிலைமை பலப்படவும், ஆக்ரமிப்பு ஏற்பட்டால் ஐ. நா. சாஸனத்தில் கண்டுள்ள படி கூட்டுப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்வதுமே அசிஸனின் யோசனைகள் என்று தெரிகிறது.

இத்திட்டப்படி இந்தோனேஷியா, ஜப்பான், சயாம், பிலிப்பைன்ஸ், கொரியா மலேயா, பர்மா, இந்தோசீனு இவைகளின் நலனில் யுனைடெட் ஸ்டேட்ஸ் சிரத்தை காட்டும். இத்திட்டத்தினுல் வெறும் உதவி அளிப்பதுடன் நின்றுவிடாமல், தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலம்பெற்று விளங்க வழிஏற்படும் என்றும் கூறப்படுகிறது.

---

### கருப்பைவெள்ளையாக்க முடியும்!

கருப்புவர்ணத்தை வெள்ளை வர்ணமாக மாற்ற முடியும் என்று ஒரு பிரிஸ்டல் ரசாயன வல்லுநர் தன் ஆராய்ச்சியில் கண்டுபிடித்திருக்கிருர். இதே மாதிரி கருப்பு வர்ணத்தைப் பச்சைக்கும் இதர வர்ணங்களுக்கும் மாற்றும் வழியை இவர் கண்டுபிடித்திருக்கிருர்.

# தி. மு. கழகக் கிளைகள்

## யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை வெளி நாட்டுக்கிளை

யாழ்ப்பாணம், ஜன, 5—

வண்ணார்பண்ணை தி. மு. க அமைப்புக் கூட்டம், 25—12—49 ஞாயிறு மாலை 4 மணிக்கு சைகழக மண்டபத்தில் நடைபெற்றது. ஆசிரியர் தோழர் வே. க. கந்தசாமி (புதுமை லோலன்) கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம் யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை வெளி நாட்டுக் கிளை" நிறுவப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-வே. க. கந்தசாமி (புதுமை லோலன்) துணைச் செயலாளர்கள் :—ம, நடராசன், எம். ஆர். துரை. (புரட்சி லோலன்) பொருள் உறுப்பினர்கள்:—ஏ. இரத்தினலிங்கம், பி. இரகுநாதன் ஏனைய செயற்குழுவினர்:—எஸ். கதிர்வேலு (பரிசோதகர்) ஏ. டி. நாதன், கே. கே. நாகலிங்கம், என். நடராசா, எஸ். கனகராசா, வி. நல்லதம்பி, என். வரதராசன், எம். எஸ். அப்துல்காதர், எஸ். கனகராசா, ஏ. முத்துக்குமாரசாமி,

* * *

## கொழும்பு, வெள்ளவத்தை வெளிநாட்டுக்கிளை

கொழும்பு, ஜன. 2—

29—12—49 அன்று இரவு 8 மணிக்கு பம்பலபிட்டி, வெள்ளவத்தை தி. மு. கழக அமைப்புக் கூட்டம் அவலக்டவன் அன்னு மாளிகையில் நடைபெற்றது. தோழர் எஸ். பொன்னையா தலைமைவகித்தார். அதுபோது இதுவரை திராவிடர் கழகமாக இருந்ததை மாற்றி திராவிட முன்னேற்றக் கழகம், பம்பலபிட்டிவெள்ளவத்தைக்கிளை" என அமைக்கப்பட்டது. தோழர் இளஞ்செழியன் தி. மு. கழகம் அமைய வேண்டிய அவசியம் குறித்து சொற்பொழிவாற்றினர். பின் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது. (செ-ர்)

* * *

## தா. பழூர்—சிற்றூர்க்கிளை

தா. பழூர், ஜன. 2—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 22—12—49ல் "செல்வம்" சைக்கிள் கம்பெனியில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்-தா. பழூர், சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—முத்துக்குமாரசாமி; துணைச்செயலாளர் :—எம். வேணுகோபால்; பொருள் உறுப்பினர் :—சின்னப்பா; விளம்பர உறுப்பினர் :—தலியபெருமாள்; ஏனைய செயற்குழுவினர் :—நாராயணசாமி, கிருஷ்ண மூர்த்தி, கோவிந்தசாமி, இராமச்சந்திரன், தெய்வசிகாமணி. (செ-ர்)

* * *

## துத்திக்குளம்-சிற்றூர்க்கிளை

துத்திக்குளம், ஜன. 2—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 16—12—49ல் தோழர் து. ப. சுப்பராயன் தலைமையில் கூடியது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—துத்திக்குளம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- து. அ. அண்ணமலை, துணைச்செயலாளர் —து. ப. சுப்பராயன், பொருள் உறுப்பினர்கள்:—து. அ. விருத்தாசலம், சி. சி. அரசு, விளம்பர உறுப்பினர்கள்:—ர. ச. கிருட்டினன், து அ. பொன்னன், ஏனைய செயலுறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## வளத்தூர் (வ. ஆ.)-சிற்றூர்க்கிளை

வளத்தூர். ஜன. 2—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 29—12—49ல் தோழர் கே. டி. பாலகிருஷ்ணன் தலைமையில் கூடியது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—வளத்தூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—டி. பி, கோவிந்தசாமி, துணைச்செயலாளர்:—எஸ். மாணிக்கம், நிதி உறுப்பினர்:—டி. பி. கே. மூர்த்தி, விளம்பர உறுப்பினர்:—கே. டி. பாலகிருஷ்ணன், ஏனைய செயற்குழுவினர்:—சி. எம். வெங்கடேசன், ஏ. என். பாலசுந்தரம், ஈ. வெங்கடாசலம், வி. டி தனபால், ர. கிருஷ்ணன், டைலர் கண்ணன், ஜி. டி. எல். நாதன், வி. சி. மோகன், ஆறுமுகம், கண்ணன், எஸ். என். மார்க்கபந்து, ஆர். வெங்கடேசன்; டி. என். பச்சப்பன், ஜி. ரங்கநாதன் வி. சி. குப்புசாமி, ஜவுளி ...ப்புசாமி. (செ-ர்)

* * *

## நல்லிபாளையம்—சிற்றூர்க்கிளை

நல்லிபாளையம், ஜன 4—

நாமக்கல் தாலுக்கா நல்லிபாளையம் தி. மு, க. அமைப்புக்கூட்டம்; 27—11—49ல் தோழர் பி. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். கே. பி. வேல், கா. பெருமாள், ஆகியோர் பேசிய பின்பு "திராவிட முன்னேற்றக் கழகம்—நல்லிபாளையம் சிற்றூர்க் கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்: -பி. இராமசாமி, துணைச் செயலாளர்:—என். எம். இராமசாமி, பொருள் உறுப்பினர்:- பி. நரசிம்மன், விளம்பர உறுப்பினர்:—க. பத்மநாசன்.

* * *

## ஆம்பூர் சாணுங்குப்பம்—நகர உட்கிளை

ஆம்பூர், ஜன. 6—

4—1—50 சாணுக்குப்பம் திருவள்ளுவர் மைதானத்தில் தோழர் ஐ. பெ. கோவிந்தன் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தலைவர் தி. மு. கழகம் அமைய வேண்டிய அவசியம் குறித்து பேசினர். பின்னர் தோழர் ச சின்னதம்பி பேசினர். பிறகு "திராவிட முன்னேற்றக் கழகம்—ஆம்பூர் நகர சாணுங்குப்பம் உட்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—சி. சின்னகண்ணு துணைச்செயலாளர்:— எம். எஸ். சிகாமணி, நிதி உறுப்பினர்:— எஸ். கே. பொன்னுசாமி, விளம்பர உறுப்பினர்;—எஸ். வி. பி வாசன், ஏனைய செயற்குழுவினர்:— கே. ராஜி, சி. முனுசாமி, கே. சுப்பிரமணியம், கு. பெரிய எல்லன், ஏ, அபிமன்னன், வைத்தியர் ஏ. கங்காநாதன், எம். முனிசாமி, எம். எஸ். பெருமாள். ஏ, காளியப்பன்.

# இனி நடப்பவை

மத்தூர்—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக்கூட்டம் 11-1-50 புதன் இரவு 8 மணிக்கு "திராவிடன் தையல் நிலைய"த்தில் தோழர் இரா. இளவரசு தலைமையில் நடைபெறும். அதுபோது பொங்கல் நன்னாளை நன்முறையில் கொண்டாடுவது பற்றி முடிவு செய்யப்படும்.

* * *

தேவதானம்—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 11—1—50 ல் ... மங்கலூர் தோழர் ஆ. திராவிட மணி தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் எம். என். சிவசாமி இரா. சு. தங்கப்பழம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

# தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

## 11—1—50

| | |
|---|---|
| குளித்தலை:— | சி. என். அண்ணாதுரை. |
| திருவள்ளூர்:— | டி சண்முகம், சத்தியவாணிமுத்து, சி. பி. சிற்றரசு, |
| கடையநல்லூர்:— | இரா. சு. தங்கப்பழம் எம். எஸ். சிவசாமி, ஆ. திராவிட மணி. |

## 12—1—50

| | |
|---|---|
| கூனூர் (நீலகிரி) :— | சி. பி. சிற்றரசு |

# போகிற போக்கில்...!

"பிலிப்பைன் ஜனாதிபதி அமெரிக்கா செல்கிருர். ஏன்?

—செய்தித் தலைப்பு

இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேரு அமெரிக்கா சென்றுவந்தார். ஏன்?

* * *

"பாதுகாப்பு கவுன்சிலில் தேசிய சீனு பற்றிய தகராறு"

—செய்தித் தலைப்பு

அப்படிபொரு சீனு இன்னும் இருக்கிறதா வென்று ஆச்சரியத்துடன் கேட்கிருர் ஒரு உண்மை வாதி!

* * *

போலீஸ் உடுப்புக்கள், சின்னங்கள் முதலியவற்றில் இருந்துவரும் கிரீடத்துக்குப் பதிலாக, 26-ந் தேதி இந்தியா குடியரசாகும்போது, அசோகச் சின்னம் இடம் பெறும்.

—செய்தி

அசோகச் சின்னத்தை இதற்கெல்லாம் எதற்குப் பயன்படுத்துவது — ராமபிரான் பாதுகைச் சின்னத்தைப் பொறித்துவிட்டால் 'வெகு' பொருத்தமாயிருக்குமெனத்தனது அபிலாஷையை வெளியிட விரும்புகிருர் ஒரு ராமராஜ்ய ஏங்கி!

* * *

'பல்வேறு மதத்தினருக்கும் சகிப்புத் தன்மையே பிரதானம்'

—சி. ஆர்.

இந்து மதத்தினருக்கு மட்டும் இது இருந்துவிட்டால் போதும்; இதரமதத்தினருக்கு இது இயல்பாய் அமைந்திருக்கின்றதென்கிருர் வடநாடு சுற்றுப்பிரயாணி யொருவர்!

* * *

'அமெரிக்காவிலும் பாதிப்பேர் அரைப் பட்டினி!'

—செய்தித் தலைப்பு

அப்போ, பரவாயில்லை! இந்தியாவில் முக்கால் வாசிப் பேர் முழுப் பட்டினியாயிருப்பதில் அநியாய மொன்றுமில்லை!

* * *

"சர்க்கார் ஊழியர்களுக்கு 'ஸ்டிரைக்' செய்ய உரிமை இருக்கக் கூடாது"

—மந்திரி காட்கில்

கூடவே கூடாதுதான்! சர்க்கார் பணத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஸ்டிரைக்கும் செய்வது பாபமல்லவா! அன்றாடம் கூலிவேலை செய்து-சர்க்கார் ஆதிக்கத்தில் இல்லாமல்-ஜீவனம் செய்துவரும் தனிப்பட்ட தொழிலாளர்கள் சம்பளம் போதவில்லையெனத் தங்கள் முதலாளியிடம் கூறி, வேலை நிறுத்தம் மேற்கொண்டாலே துப்பாக்கி, தடி, கண்ணீர்ப் புகை,'ரத—கஜ—துரக பதாதிகளுடன்' போலீஸ் பட்டாளத்தை அனுப்பிவைக்கும் அரசாங்கம், தன் சொந்த சிப்பந்திகளையா, வேலை நிறுத்தம் செய்ய விட்டுவிடுவது? இது இளிச்சவாய்த்தனமாகி விடாதா? நன்று சொன்னர், மந்திரி காட்கில்! அவர்வாயில சர்க்கரையைத்தான் கொட்டவேண்டும். (சர்க்கரை நெருக்கடி காரணமாக, வேறு எதையாவது அள்ளிக்கொட்டிவிடப்போகிறீர்கள்!)

* * *

மதங்களினுல் குற்றமில்லை; மத ஸ்தாபனங்களின் போக்குதான் மோசம்"

—அமிருத கௌரி

காபி சுத்தமானதுதான்: ஆனுல் அது இருக்கும் டம்ளர்தான் அழுக்குப் படிந்தது என்று கூறும் ஹோட்டல்-சர்வரின் நியாயத்தைப் போன்றிருக்கிறதோ!

# சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம்

## பொங்கல் விழாப் பொதுக்கூட்டம்

நாள் :— 14—1—50 சனி

நேரம் :— மாலை 5-30 மணி

இடம் :— சர். பி. தியாகராயச் செட்டியார் உயர்நிலைப்பள்ளி மைதானம், வண்ணாரப்பேட்டை

தலைவர் :—டி. எம். பார்த்தசாரதி

சொற்பொழிவாளர்கள் :—

க. அனபழகன், கா. அப்பாத்துரை, கே. ஏ. மதியழகன், டாக்டர் தாமாம்பாள், என். வி. நடராசன், சத்தியவாணிமுத்து, மா. இளஞ்செழியன், சி. டி. டி. அரசு, என். ஜீவரத்தினம், இரெ. இளம்வழுதி, இரா. நெடுஞ்செழியன்

சி. வி. ராஜன், வி. உறுப்பினர். கே. கோவிந்தசாமி, செயலாளர்.

சிந்தனையாளர்களின் செயலிடமாக 'சினிமாக்கலை' வளரப் பாடுபடும்.

"சினிமா தூது"

புரட்சிகரமான மாதமிருமுறை

25-1-50 முதல் வெளிவருகிறது!

தனி இதழ் .... 0—1—6

ஆண்டு சந்தா.... 3—0—0

முன்பணம் கட்டும் விற்பனையாளர்களும், கிருபர்களும் உடனேதேவை

நிர்வாகி 'சினிமா தூது'

அன்புப் பண்ணை, மதுரை.

"பொன்னி"

பொங்கல் மலரில்

தமிழ்ப் பெரியார் திரு. வி. க.
கவிஞர் பாரதிதாசன்
அறிஞர் அண்ணதுரை
முன்னுள் அமைச்சர் எஸ். முத்தையா
டாக்டர் மு. வரதராசன்
கோவைக்கிழார்
இசையரசு தண்டபாணிதேசிகர்
அறிஞர் அப்பாதுரை
இரா. நெடுஞ்செழியன்
க. அன்பழகன்
மு. கருணநிதி
அகிலன்
சுகி
டாக்டர் சிதம்பரன்
தோழியர் சத்தியவாணிமுத்து
டி. கே சீனிவாசன்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
இளமைப்பித்தன்
மு. அண்ணமலை
வாணிதாசன்
நாரா. நாச்சியப்பன்
கோவை இளஞ்சேரன்
கிசு. திருநாவுக்கரசு
இராம. வெ. சேதுராமன்
சி. பி. சிற்றரசு
என். வி. நடராசன்
மா. இளஞ்செழியன்
கே. ஏ. மதியழகன்
ஏ. கே. வேலன்
நா. பாண்டுரங்கன்
தில்லை. வில்லாளன்
அத்தான்
தே. நாராயணன்
வ. சம்பந்தன்
டார்பன் ச. மு. பிள்ளை
மெ. சுந்தரம்
எஸ். சதாசிவம்
பொ. திருஞானசம்பந்தம்
ரவி
ரா. தனலன்
தோழியர் சுலோசன
லேன
மன்னர் மன்னன்
ரா. முத்து
முருகு சுப்பிரமணியம்
கமலா விருத்தாசலம்
கே. ஜி. ராதாமணளன்
நாரண துரைக்கண்ணன்

ஆகியோர் எழுதுகின்றனர்

விலை ரூ. 3-12-0

தபாலில் ரூ. 4-0-0

"பொன்னி"—புதுக்கோட்டை

# அறிவிப்பு

'மாலைமணி'யில் வெளியிடுவதற்கென அனுப்பப் பெறும் பொதுக்கூட்டம், மாநாடு பற்றிய அறிக்கைகள் விளம்பரமாகவே கருதப்படுமென்பதையும், அவற்றுக்குரிய கட்டணம் செலுத்தியாக வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். 'விளம்பர'மாகக் கொடுக்கப்படாத அறிக்கைகள் 'இனி நடப்பவை'யிலேயே இடம் பெறும்.

நிர்வாகி 'மாலைமணி,




# வானொலி

(11-1-50 புதன்கிழமை)

## சென்னை

[211·3 மீட்டர்கள்]

**காலை:**

7-15 தமிழில் செய்திகள்
7-30 ருக்மிணி ... வீணை
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
8-50 வயலின் (அ. இ. ரே. வி.)

**பிற்பகல்:**

12-30 உயர்தரப் பள்ளிகளுக்கு
1-00 மாதர் நிகழ்ச்சி
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு
2-45 பல்வகை (இசைத்தட்டு)

**மாலை:**

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-30 பி. ஹயக்ரீவாச்சார்-பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 டி. எஸ். சின்னம்மா-பாட்டு

**இரவு:**

7-00 எஸ். கிருஷ்ணமூர்த்தி—பாட்டு
7-15 தமிழில் செய்திகள்
7-30 ஷாமு..ம்மா—பாட்டு
7-45 மாகாண முன்னேற்றம்—பேச்சு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 ஆங்கிலத்தில்—பேச்சு
9-30 டி. விஸ்வநாதன்—புல்லாங்குழல்
10-00 பல்வகை (இசைத்தட்டு)
10-30 முடிவு

● * ●

## திருச்சி

[395·3 மீட்டர்கள்]

**காலை:**

7-15 தமிழில் செய்திகள்
7-30 சே. செபஸ்டியன், ஜோஸப்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சகுந்தலா, ராமச்சந்திரன்-பாட்டு
8-50 சே. சுப்ரமணியம் (இ. த.)

**பிற்பகல்:**

12-30 உயர்தரப் பள்ளிகளுக்கு
1-00 சதங்கம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சகுந்தலா, ராமச்சந்திரன்-பாட்டு
2-00 தமிழில் செய்திகள்
2-10 என். சே. தலைக்கண்ணு சகோதரர்கள்—நாகஸ்வரம் (இசைத்தட்டு)
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு

**மாலை:**

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-00 வீ. சந்தானமய்யா-வயலின்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 பல்வகை (இசைத்தட்டு)
6-30 கிராம நிகழ்ச்சிகள்

**இரவு:**

7-15 தமிழில் செய்திகள்
7-30 சோனல் நாடகம்
7-45 சென்னையில் உள்ளபடி
8-20 சே. செபஸ்டியன் ஜோஸப்—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 வீ. சந்தானமய்யா-வயலின்
9-35 இசை ... இசைத்தட்டு
10-00 முடிவு.

## சேலம் மாவட்ட தி. மு. க. கிளைச் செயலாளர்களுக்கு

சென்ற 31-12-49-ல் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுவின் முடிவுபடி இந்த ஆண்டுக்கு அங்கத்தினராகும் உரிமை 31-3-50 வரையே உள்ளது. அந்த தேதிக்குள்ளாகவே மாவட்டக் கழகமும் அமைக்கப்பெற்றாக வேண்டும். ஏற்கனவே என்னிடமிருந்து அங்கத்தினர் பதிவுப் புத்தகங்கள் பெற்ற கிளைக்கழகங்களும், இயக்க அன்பர்களும், அங்கத்தினர்கள் பதிவான விவரத்தையும், புத்தகத்தின் மாகாண, மாவட்ட பகுதிகளையும் அதற்குரிய கட்டணத்தையும் இன்னும் அனுப்பிக் கொடாமல் இருக்கின்றனர். இது மிக மிக வருத்தத்துக்குரிய ... மற்ற மாவட்டங்களில், மாவட்டக் கழகம் அமைத்து மாநாடுகள் நடத்தி முடிவுக்கு வந்துவிட்டனர். நம் மாவட்டத்திலும் மாநாடு நடத்தவேண்டுமென்று அன்பர்கள் சிலர் விரும்புகின்றனரெனினும், மாவட்டக் கழகம் அமைக்காத வரையில், மாநாடு நடத்த இப்போதுள்ள அமைப்பு முறையில் அனுமதியில்லை. நம்முடைய மாவட்டத்தில் இதுவரை சுமார் 32 கிளைக் கழகங்களே துவக்கப்பட்டுள்ளன. கிளைக் கழகங்கள் அமைக்கப்பெற வேண்டிய இடங்கள் இன்னும் மிகுதியாக இருக்கின்றன. ஆகவே, கிளைக் கழகச்செயலாளர்களும் "போர்க்கள" நாட்களை, அங்கத்தினர் சேர்ப்பது, கிளைக் கழகங்கள் அமைப்பது போன்ற ஆக்க வேலைக்கே பயன்படுத்தி இம் மாத இறுதிக்குள்ளாகவேனும் மாவட்டக் கழகம் அமைக்கும் முயற்சியில் எனக்குத் துணை புரியவேண்டுமென்று எல்லாத் தோழர்களையும் மிகவும் வேண்டுகிறேன். அங்கத்தினர் சேர்க்கை விபரம் உடனுக்குடன் எனக்குத் தாக்கல் தெரிவிக்கவும் வேண்டுகிறேன்.

அ. சித்தையன்
சேலம்மாவட்ட அமைப்புக்குழு உறுப்பினர்.

குறிப்பு:— கிளைக்கழகங்கள், மாவட்டக் கழகத்திற்கு ஒவ்வொரு கழகமும் இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்ப ஏற்பாடு செய்யக் கோருகிறேன்.

## முகவரி மாற்றம்

மு. கருணாநிதி
மார்டன் தியேட்டர்ஸ்
எக்ஸ்டன்ஷன் சேலம்

## வேண்டுகோள்

என்னிடம் அங்கத்தினர் சேர்க்கும் ரசீது புத்தகம் வாங்கிச் சென்ற உள்ளூர் வெளியூர் தோழர்கள் சேர்த்தவரையில் உடனடியாக, ரசீது புத்தகத்துடன் கணக்கைக் கொடுக்கும்படி வேண்டுகின்றனன். மாவட்ட அமைப்பாளருக்கும் தலைமை நிலையத்திற்கும் கணக்கை ஒப்படைக்க வேண்டும். மேலும் ரசீது புத்தகம் வேண்டுவோர் என்னிடம் வந்து பெற்றுக் கொள்ளவும்.

அன்பன்
குமாரசாமி ... லம்
கள்ளக்குறிச்சி

## சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press. 2/45, Muthumari Chetty Street, Madras-1.